பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

28 03 2026 SATURDAY 7 15 AM

ஆகாஷவாணி

## செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

1. ஆக்கப்பூர்வமான செய்திகளுக்கு ஊடகங்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மத்திய அரசு எரிசக்தி கட்டமைப்பை தொடர்ந்து வலுப்படுத்தி வருவதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

3. கேரளம், அசாம் மாநிலங்களிலும், புதுச்சேரி யூனியன்பிரதேசத்திலும் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் சூடுபிடித்துள்ளது.

4. முதலமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் உள்ளிட்ட மிக முக்கிய பிரமுகர்கள் பயணிக்கும் விமானங்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக, விமானப் போக்குவரத்து இயக்குநரகம் புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

5. அகமதாபாத் சர்வதேச டென்னிஸ் இறுதிப் போட்டியில் இந்தியாவின் அபினவ் சஞ்சீவ் - மனீஷ் சுரேஷ் இை□ , ஜப்பான் இை□ யை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

>>>>> <<<<<

பொருளாதார வளர்ச்சி, கண்டுபிடிப்பு போன்ற ஆக்கப்பூர்வமான செய்திகளுக்கு ஊடகங்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

மறைந்த பத்திரிகையாளர் ராம்நாத் கோயங்கா நினைவாக வழங்கப்படும் இதழியல் விருதுகளை நேற்று புதுதில்லியில் வழங்கிப் பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சியில் நாட்டில் நடக்கும் மாற்றங்களை ஊடகங்கள் மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

உரையாடல்கள், விவாதங்கள் மற்றும் மாற்றுக்கருத்துகள், தேசநலன் சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கு வழிவகுக்க வேண்டுமே தவிர அவை இடையூறு விளைவிப்பதாக இருக்கக் கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் அவசர நிலை அமலில் இருந்தபோது ராம்நாத் கோயங்கா வெற்று தலையங்கத்தை பிரசுரித்ததாகவும், அது மக்களின் கருத்துரிமையின் வலிமையான அடையாளமாக மாறியது என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>>>>> <<<<<

மத்திய அரசு எரிசக்தி கட்டமைப்பை தொடர்ந்து வலுப்படுத்தி வருவதுடன், இத்துறையில் சுயசார்பு அடைவதற்கான முன்முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

பொதுத்துறை நிறுவனமான ஆயில் இந்தியா நிறுவனம் நேற்று முன்தினம் தனது வரலாற்றிலேயே அதிகபட்ச எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தியை எட்டி சாதனை படைத்தது என்று சமூக வலைதளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

மேற்காசிய போர் காரணமாக உலகம் முழுவதும் நிச்சயமற்ற சூழல் காணப்படுவதாகவும், இதனால் எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகத்தில் ஏற்படும் மாற்றங்களை மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சவால்களை சந்திக்க அரசு தயார் நிலையில் உள்ளதாகவும், பொதுமுடக்கம் மீண்டும் ஏற்படும் என்ற தகவல் முற்றிலும் தவறானது என்றும், இதுபோன்ற வதந்திகளை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

>>>>> <<<<<

உலக வர்த்தக அமைப்பு ஒருமித்த கருத்தின் அடிப்படையில் மீண்டும் வலுவாக செயல்பட வேண்டும் என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

கேமரூனில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பின் 14வது அமைச்சர்கள் மாநாட்டில் நேற்று பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

உலக வர்த்தக அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகள் தங்களுக்கான நலன்களில் உறுதியாக இருப்பதோடு உலக நலன்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கும்போது அந்த அமைப்பு செழுமையாக செயல்பட முடியும் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக அமெரிக்க வர்த்தக பிரதிநிதி திரு. Jamieson Greer-ஐ சந்தித்துப் பேசிய திரு. கோயல், இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்த பேச்சுகளை அடுத்தகட்டத்திற்கு கொண்டு செல்வது குறித்து கருத்துகளை **பரிமாறிக்கொண்டார்.**

இதைத் தொடர்ந்து தென்கொரிய வர்த்தக அமைச்சர் Yeo Han-Koo-ஐ சந்தித்து உலக வர்த்தக அமைப்பின் சீர்திருத்தங்கள் குறித்து திரு. கோயல் ஆலோசித்தார்.

**நியூசிலாந்து வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் துறை அமைச்சர் திரு. Dot Maclay-ஐ சந்தித்து முக்கியமான துறைகளில் ஒத்துழைத்து செயல்படுவது குறித்து திரு. பியூஷ் கோயல் விவாதித்தார்.**

>>>>> <<<<<

கேரளம், அசாம் மாநிலங்களிலும், புதுச்சேரி யூனியன்பிரதேசத்திலும் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் சூடுபிடித்துள்ளது.

இம்மாநிலங்களில் வேட்பாளர்கள் வாகனத்தில் சென்று வாக்காளர்களை சந்தித்து ஆதரவு திரட்டி வருகின்றனர்.

வேட்பாளர்களுக்கு ஆதரவாக அரசியல் கட்சித் தலைவர்கள் பொதுக்கூட்டங்களில் உரையாற்றி வருகிறார்கள்.

அசாம் மாநிலத்தில் மொத்தமுள்ள 126 தொகுதிகளுக்கு 722 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

கேரளாவில் 140 தொகுதிகளில் 890 பேர் களத்தில் உள்ளனர்.

புதுச்சேரியல் 30 தொகுதிகளுக்கு 294 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

*இவைதவிர இடைத்தேர்தல் நடைபெற உள்ள கர்நாடகாவின் 2 தொகுதிகளிலும், கோவா, நாகாலாந்து, திரிபுரா மாநிலங்களில் தலா ஒரு தொகுதியிலும் தேர்தல் பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்று வருகிறது.*

*>>>>> <<<<<*

மேற்குவங்கத்தின் பல்வேறு பகுதிகளில் சமீபத்தில் நிகழ்ந்த வன்முறை மற்றும் அமைதியற்ற சூழலைத் தொடர்ந்து, அம்மாநில காவல்துறை நிர்வாகத்தைக் கண்காணிப்பதை தேர்தல் ஆணையம் தீவிரப்படுத்தியுள்ளது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, அனைத்து நிலை அதிகாரிகளுக்கும் கடுமையான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தின் அறிவுறுத்தலின்படி, பிணையில் வர முடியாத அனைத்துக் கைது வாரண்டுகளும் உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும், தலைமறைவாக உள்ள குற்றவாளிகளைக் கைது செய்யச் சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்குவங்கத்தில் ஏப்ரல் 23 மற்றும் 29 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

*>>>>> <<<<<*

அசாம், கேரளம், புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தல்களை முன்னிட்டு, தேர்தல் ஆணையம் பல்வேறு விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

மேற்குவங்கத்தின் ஹவுராவில் நேற்ற மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் தேர்தல் அதிகாரிகள் பங்கேற்ற சைக்கிள் பேரணி நடத்தப்பட்டது.

வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நாட்டுப்புறப் பாடல்கள், நடனம் மற்றும் நாடகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேற்குவங்கத்தில் வாக்காளர் விழிப்புணர்வு படகுப் போக்குவரத்து சேவையும் தொடங்கி வைக்கப்பட்டது.

இளைஞர்களையும் முதல்முறை வாக்காளர்களையும் கவரும் வகையில், புகழ்பெற்ற அனிமேஷன் கதாபாத்திரங்களை கொண்டும், குறிப்பாக நகர்ப்புற வாக்காளர்கள், பெண்கள், மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் அதிக அளவில் வாக்களிப்பதை உறுதிப்படுத்தும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

>>>>> <<<<<

முதலமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் உள்ளிட்ட மிக முக்கிய பிரமுகர்கள் பயணிக்கும் விமானங்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக, விமானப் போக்குவரத்து இயக்குநரகம் புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

கடந்த காலங்களில் இத்தகைய பயணங்களின்போது ஏற்பட்ட விபத்துக்கள் மற்றும் அசம்பாவிதங்களைக் கருத்தில் கொண்டு, முக்கிய பிரமுகர்களை ஏற்றிச் செல்லும் அட்டவணைப்படுத்தப்படாத விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர் நிறுவனங்களுக்கு இந்த வழிகாட்டுதல்கள் பொருந்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமான ஓடுதளங்கள் மற்றும் தற்காலிக ஹெலிகாப்டர் தளங்களில் குறிப்பாக தேர்தல் காலப் பயணங்களின்போது நடைபெறும் செயல்பாடுகள் குறித்து ஆய்வு

செய்ததில், விதிமுறைகள் மீறப்படுவதும் பாதுகாப்பு சமரசம் செய்யப்படுவதும் தெரியவந்துள்ளதாக விமான போக்குவரத்து இயக்குநரக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

சவாலான சூழல்களில், குறிப்பாக தற்காலிக ஹெலிகாப்டர் தளங்கள் மற்றும் தொலைதூர விமான ஓடுதளங்களில் செயல்பாட்டு நெறிமுறைகளைத் துல்லியமாகப் பின்பற்றுவதை அது வலியுறுத்தியுள்ளது.

>>>>> <<<<<

தில்லியை ஊடக மற்றும் பொழுதுபோக்குத் துறையின் உலகளாவிய மையமாக மேம்படுத்துவதற்காக, தில்லி அரசு பிரசார் பாரதியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

திரைப்படம், தொலைக்காட்சி, அனிமேஷன், விஷுவல் எஃபெக்ட்ஸ், கேமிங் மற்றும் காமிக்ஸ் உள்ளிட்ட ஊடகத் துறையின் முக்கியப் பிரிவுகளை ஒரே தளத்தின் கீழ் கொண்டுவர இந்த ஒப்பந்தம் உதவும் என்று தில்லி முதல்வர் திருமதி. ரேகா குப்தா கூறினார்.

>>>>> <<<<<

இஸ்ரேல், ஈரானின் முக்கிய எஃகு, மின்சாரம் மற்றும் அணுசக்தி நிலையங்கள் மீது நேற்றிரவு தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியதை அடுத்து, மேற்கு ஆசியாவில் தொடர்ந்து பதற்றம் அதிகரித்து வருகிறது.

இந்தத் தாக்குதல்கள் தூதரக முயற்சிகளைச் சீர்குலைப்பதாகவும், பேச்சுவார்த்தைக்கான காலக்கெடு நீட்டிக்கப்பட்டதற்கு முரணாக இருப்பதாகவும் கூறி ஈரான் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. அப்பாஸ் அராக்சி, தனது சமூக ஊடகப் பதிவில், ஈரானின் இரண்டு மிகப்பெரிய எஃகு ஆலைகள் மற்றும்

முக்கியமான அணுசக்தி நிலையங்கள் உள்ளிட்ட உள்கட்டமைப்புகள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களுக்காக, இஸ்ரேல் கடுமையான விலையைக் கொடுக்க வேண்டியிருக்கும் என்று எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் உலகின் மிகவும் பரபரப்பான எண்ணெய் கப்பல் போக்குவரத்துப் பாதையாகவும், தற்போதைய மோதலின் முக்கியப் புள்ளியாகவும் விளங்கும் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக மனிதாபிமான உதவிகள் கிடைப்பதை எளிதாக்கவும் விரைவுபடுத்தவும் ஈரான் ஒப்புக்கொண்டுள்ளது.

இதுகுறித்து ஐ.நா, சபைக்கான ஈரானிய தூதர் திரு. அலி பஹ்ரைனி கூறுகையில், மனிதாபிமான உதவிகள் மற்றும் விவசாயப் பொருட்களை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் இந்த முக்கியமான நீர்வழிப்பாதை வழியாகச் செல்ல ஈரான் அனுமதி அளித்துள்ளதாகத் தெரிவித்தார்.

>>>>> <<<<<

அகமதாபாத் சர்வதேச டென்னிஸ் இறுதிப் போட்டியில் இந்தியாவின் அபினவ் சஞ்சீவ் - மனீஷ் சுரேஷ் இை□ , ஜப்பானின் Fukuda - Sueoka இை□ யை எதிர்கொள்கிறது.

-------------

கேண்டிடேட்ஸ் செஸ் போட்டி இன்று சைப்ரசில் தொடங்குகிறது.

அடுத்த மாதம் 16ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்தப் போட்டியில் இந்தியாவின் சார்பில் பிரக்ஞானந்தா, வைஷாலி, திவ்யா உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

----------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

பெங்களூருவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறும் முதல் ஆட்டத்தில் நடப்புச் சாம்பியன் பெங்களூரு அணி - ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

நடப்பு ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் சென்னை, மும்பை, கொல்கத்தா, ராஜஸ்தான், பஞ்சாப் உள்ளிட்ட 10 அணிகள் பங்கேற்கின்றன.

*>>>>>END <<<<<*